12th STD

**முன் மாதிரி இரண்டாம் இடைப் பருவத் தேர்வு**

**கணக்குப்பதிவியல்**

நேரம் : 1.30 மணி | மதிப்பெண் : 50

## பகுதி ---- I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்** | 10 × 1 = 10

1. நிதிநிலை அறிக்கைகள் வெளிக்காட்டாதது
   அ) பணம்சாரா தகவல்கள் | ஆ) கடந்தகால தகவல்கள்
   இ) குறுகியகால தகவல்கள் | ஈ) நீண்டகால தகவல்கள்
2. நிதி என்னும் சொல் குறிப்பிடுவது
   அ) நடப்புப் பொறுப்புகள் | ஆ) நடைமுறை முதல்
   இ) நிலைச் சொத்துகள் | ஈ) நீண்டகாலச் சொத்துகள்
3. ஒரு பொது அளவு இருப்புநிலைக் குறிப்பில், நீண்டகாலச் சொத்துகளின் சதவீதம் 65 எனில், நடப்புச் சொத்துகளின் சதவீதம் எவ்வளவு?
   அ) 165 | ஆ) 135 | இ) 35 | ஈ) 100
4. பங்குதாரர் நிதிக்கும் மொத்த சொத்துகளுக்கும் உள்ள விகிதாச்சாரம்
   அ) உரிமையாளர் விகிதம் | ஆ) முதல் உந்துதிறன் விகிதம்
   இ) புற அக பொறுப்பு விகிதம் | ஈ) நடப்பு விகிதம்
5. நடப்புப் பொறுப்பு ₹. 40,000 ; நடப்புச் சொத்து ₹. 1,00,000 ; சரக்கிருப்பு ₹. 20,000 எனில் விரைவு விகிதம்
   அ) 1:1 | ஆ) 2.5:1 | இ) 2:1 | ஈ) 1:2
6. இலாபத் தன்மை விகிதங்கள் --------- ல் வெளிப்படுத்தப்படுகின்றன.
   அ) மடங்கு | ஆ) விகிதாச்சாரம் | இ) சதவீதம் | ஈ) மேற்கூறிய அனைத்தும்
7. நிறுமம் ₹. 10 மதிப்புள்ள 50,000 நேர்மைப் பங்குகளை பங்கொன்று ₹. 3 வீதம் முனைமத்தில் வெளியிட்டது. முனைமத்தொகை -----------------
   அ) ₹. 1,00,000 | ஆ) ₹. 50,000 | இ) ₹. 1,50,000 | ஈ) ₹. 2,00,000
8. ₹. 8 செலுத்தப்பட்ட, ₹. 10 மதிப்புள்ள பங்கு ஒறுப்பிழப்பு செய்யப்பட்டது எனில், அதன் குறைந்த அளவு மறுவெளியீட்டு விலை -------------
   அ) பங்கொன்று ₹. 10 | ஆ) பங்கொன்று ₹. 8 | இ) பங்கொன்று ₹. 5 | (ஈ) பங்கொன்று ₹. 2
9. நிறுமக் கலைப்பின் போது மட்டுமே அழைக்கப்படக் கூடிய பங்கு முதலின் ஒரு பகுதி இவ்வாறு அழைக்கப்படும்.
   அ) அங்கீகரிக்கப்பட்ட முதல் | ஆ) அழைக்கப்பட்ட முதல்
   இ) முதலினக் காப்பு | ஈ) காப்பு முதல்
10. பின்வருவனவற்றில் நிலைச் சொத்து எது?
   அ) குறுகியகாலக் கடன் | ஆ) இயந்திரம்
   இ) சரக்கிருப்புகள் | ஈ) ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்கு சமமானவை



## பகுதி --- II

**எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 17 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** | 5 × 2 = 10

11. மிகை ஒப்பம் என்றால் என்ன?
12. நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வின் கருவிகளை பட்டியலிடவும்
13. விரைவு விகிதம் என்றால் என்ன?
14. கமல் நிறுமம் பங்கொன்று ₹. 10 வீதம் 5,000 நேர்மைப் பங்குகளை விண்ணப்பத்தின் போது முழுத்தொகையும் செலுத்தும் வகையில் வெளியிட்டது. பங்கொன்று ₹. 2 முனைமத்தில் வெளியிட்டால் குறிப்பேட்டுப் பதிவுகள் எவ்வாறு அமையும்?
15. அருள் நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து ஒப்பீட்டு வருமான அறிக்கையைத் தயாரிக்கவும்.

| விவரம் | 2015 - 2016 (₹) | 2016 - 2017 (₹) |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 50,000 | 60,000 |
| இதர வருமானம் | 10,000 | 30,000 |
| செலவுகள் | 40,000 | 50,000 |

16. கீழ்க்கண்ட தகவல்களிலிருந்து விரைவு விகிதத்தைக் கணக்கிடவும்.
    மொத்த நடப்புப் பொறுப்புகள் ₹. 2,40,000 ; மொத்த நடப்புச் சொத்துகள் ₹. 4,50,000 ;
    சரக்கிருப்பு: ₹. 70,000 ; முன்கூட்டிச் செலுத்திய செலவுகள்: ₹. 20,000.
17. கீதா நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து, நிலைச் சொத்துகள் சுழற்சி விகிதத்தைக் கணக்கிடவும்.
    i) அவ்வாண்டில் விற்பனையிலிருந்து பெற்ற வருவாய் ₹. 55,00,000.
    ii) அவ்வாண்டின் இறுதியில் நிலைச் சொத்துகள் ₹. 5,00,000.

## பகுதி - III

**எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 24 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** | 5 × 3 = 15

18. முன்னுரிமைப் பங்குகளுக்கும், நேர்மைப் பங்குகளுக்கும் உள்ள வேறுபாடுகளை கூறவும்.
19. விகித பகுப்பாய்வின் நோக்கங்களை விளக்கவும்
20. ராஜன் நிறுமம் ₹. 6,00,000 மதிப்புள்ள இயந்திரத்தை ஜெகன் நிறுவனத்திடமிருந்து வாங்கியது. அது பங்கொன்று ₹.10 மதிப்புள்ள முற்றிலும் செலுத்தப்பட்ட நேர்மைப்பங்குகளை அவர்களுக்கு செலுத்த வேண்டிய தொகைக்காக வழங்கியது. பங்குகளை முகமதிப்பில் வெளியிட்டால், பதிய வேண்டிய குறிப்பேட்டுப்பதிவுகளைத் தரவும்.
21. பின்வரும் விவரங்களிலிருந்து நடப்பு விகிதத்தினை கண்டறியவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| குறுகிய முதலீடுகள் | 40,000 | நிலைச் சொத்துகள் | 5,00,000 |
| சரக்கிருப்பு | 2,00,000 | வணிக கடனீந்தோர் | 80,000 |
| வணிகத்தின் கடனாளிகள் | 1,20,000 | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டுகள் | 40,000 |



www.Padasalai.Net

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

22. பின்வரும் தகவல்களிலிருந்து புற அகப் பொறுப்புகள் விகிதத்தினை கணக்கிடவும்

2019,மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக்குறிப்பு ( வருவிய )

| விவரம் | ₹. |
|---|---|
| 1. **பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்** | |
| 1) **பங்குதாரர் நிதி** | |
| அ) பங்கு முதல் | |
| நேர்மைப் பங்குமுதல் | 6,00,000 |
| ஆ) காப்பு மற்றும் மிகுதி | 2,00,000 |
| 2. **நீண்டகால பொறுப்புகள்** | |
| நீண்டகால கடன்கள் (கடனீட்டுப் பத்திரங்கள்) | 6,00,000 |
| 3. **நடப்புப் பொறுப்புகள்** | |
| அ) கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள் | 1,60,000 |
| ஆ) இதர நடப்பு பொறுப்புகள் | |
| கொடுபடவேண்டிய செலவுகள் | 40,000 |
| **மொத்தம்** | 16,00,000 |

23. ராதா நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து 2017 மாரச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான பொது அளவு வருமான அறிக்கையை தயார் செய்யவும்

| விவரம் | 2016 - 2017 (₹) |
|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 4,50,000 |
| இதர வருமானம் | 67,500 |
| செலவுகள் | 1,35,000 |

24. டேனியல் நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து ஒப்பீட்டு வருமான அறிக்கையைத் தயாரிக்க

| விவரம் | 2015 - 2016 (₹) | 2016 - 2017 (₹) |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 40,000 | 50,000 |
| இயக்கச் செலவுகள் | 25,000 | 27,500 |
| வருமான வரி % ( வரிக்கு முன்னர் உள்ள இலாபத்தில் ) | 30% | 30% |

## பகுதி – IV

**ஏதேனும் மூன்று வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 3 × 5 = 15

25. சிவா நிறுமத்தின் பின்வரும் விவரங்களிலிருந்து பொது அளவு வருமான அறிக்கையை தயார் செய்யவும்

| விவரம் | 2015 - 16 (₹) | 2016 - 17 (₹) |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 2,00,000 | 3,00,000 |
| இதர வருமானம் | 25,000 | 75,000 |
| செலவுகள் | 2,50,000 | 1,50,000 |
| வருமான வரி | 40% | 40% |





26. ராணி நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து பொது அளவு நிதிநிலை அறிக்கையினைத் தயார் செய்யவும்

| விவரம் | 2016, மார்ச் 31 | 2017, மார்ச் 31 |
|---|---|---|
| | ₹. | ₹. |
| 1) **பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்** | | |
| பங்குதாரர் நிதி | 5,40,000 | 6,00,000 |
| நீண்டகாலப் பொறுப்புகள் | 2,70,000 | 2,50,000 |
| நடப்பு பொறுப்புகள் | 90,000 | 1,50,000 |
| **மொத்தம்** | 9,00,000 | 10,00,000 |
| 2) **சொத்துகள்** | | |
| நீண்டகாலச் சொத்துகள் | 7,20,000 | 8,00,000 |
| நடப்புச் சொத்துகள் | 1,80,000 | 2,00,000 |
| **மொத்தம்** | 9,00,000 | 10,00,000 |

27. ரொவினா நிறுமத்தின் பின்வரும் வியாபார நடவடிக்கையிலிருந்து,
(i) மொத்த இலாப விகிதம் (ii) நிகர இலாப விகிதம் கணக்கிடவும்.

**இலாப நட்ட அறிக்கை**

| விவரம் | தொகை ₹. |
|---|---|
| 1. விற்பனையிலிருந்து பெற்ற வருவாய் | 4,00,000 |
| 2. இதர வருமானம் | |
| முதலிடுகளிலிருந்து பெற்ற வருமானம் | 4,000 |
| 3. மொத்த வருவாய் ( 1 + 2 ) | 4,04,000 |
| 4. **செலவுகள்** | |
| கொள்முதல் செய்த சரக்குகள் | 2,10,000 |
| சரக்கிருப்பு மாற்றம் | 30,000 |
| நிதிசார் செலவுகள் | 24,000 |
| இதர செலவுகள் ( நிர்வாகம் மற்றும் விற்பனை ) | 60,000 |
| 5. மொத்த செலவுகள் | 3,24,000 |
| வரிக்கு முன்னர் உள்ள இலாபம் ( 3 - 4 ) | 80,000 |

28. புராகிரஸ் வரையறு நிறுமம் 50,000 சாதாரணப் பங்குகளை, பங்குகொன்று ₹. 10 வீதம் வெளியிட்டது. விண்ணப்பத்தின் போது ₹. 2, ஒதுக்கீட்டின் போது ₹. 4 முதலாவது அழைப்பின் போது ₹. 2 மற்றும் இரண்டாவது அழைப்பின் போது ₹. 2 செலுத்தப்பட்ட வேண்டும். அனைத்து பங்குகளும் ஒப்பப்பட்டன மற்றும் அனைத்து தொகைகளும் முறையாக பெறப்பட்டன. குறிப்பேட்டுப் பதிவுகள் தரவும்.



www.Padasalai.Net

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593